முற்பகல் 11–05

திரு. மு. அப்பாவு: சுயேச்சை உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் கிடைக்கின்றபோது நிச்சயமாக வாய்ப்புத் தருகின்றேன், உட்காருங்கள்.

திரு. மு. அப்பாவு: 20, 30 தடவைகள் கேட்டுவிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேரம் கிடைக்கின்றபோது நிச்சயமாக ஒதுக்கித் தருகின்றேன், உட்காருங்கள்.

திரு. மு. அப்பாவு: **

(திரு. மு. அப்பாவு நின்று கொண்டு ஏதோ கூறிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை முடியட்டும். பிறகு கேட்கலாம். பேரவை விதி 110–ன்கீழ் (குறுக்கீடு) மற்றவற்றை அறையிலே வந்து கேளுங்கள். திரு. அப்பாவு, அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு) என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். திரு. அப்பாவு, தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் வேண்டுமென்றே பண்ணுகின்றீர்கள் என்பது தெரிகின்றது. உங்களுக்கு மீதம் வைத்துவிட்டுப் போயிருக்கின்றார்கள்போல் இருக்கிறது, உட்காருங்கள். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. அப்பாவு, அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்காதீர்கள், உட்காருங்கள்.

(திரு. மு. அப்பாவு அவையிலிருந்து வெளியேறினார்.)

4. விதி 110–ன்கீழ் அறிக்கை

கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளித்தல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 மார்ச் 29

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளர்ச்சி பெறவும், உயர்நிலை அடைந்திடவும் உறுதுணையாக இருப்பவர்கள் தொழிலாளர்கள். தாங்கள் பிறந்த பொன்னாடு மேன்மை அடைந்திட தங்களது இரத்தத்தை வியர்வைத் துளிகளாக்கி, நல் உழைப்பை நல்குபவர்கள் தொழிலாளர்கள். புது உலகை உருவாக்கும் கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் தொழிலாளர்கள். அத்தகைய தொழிலாளர்களில் பெரும் பகுதியினர் அமைப்புசாராத் தொழிலாளர்களாகவே உள்ளனர். இத்தகைய அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தருவது அரசின் கடமையாகும்.

நாடு நலம் பெறுவதற்காகத் தங்களது உடல் உழைப்பை நல்குகின்ற தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும், அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்தி, அவர்களது வாழ்வு வளம் பெற்றிடவும்; சமுதாயத்தில் அவர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்திடவும், இந்தியாவிலேயே முதன்முறையாக, 1982 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் என்ற ஒரு முழுமையான சட்டம் இயற்றப்பட்டது. இந்தச் சட்டத்தில், உடல் உழைப்புத் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை உருவாக்கவும், அவற்றைச் செயல்படுத்துவதற்கு வாரியத்தினை அமைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1994 ஆம் ஆண்டில் கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தை உருவாக்கினேன். மேலும், 1994 ஆம் ஆண்டே தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (கட்டுமானத் தொழிலாளர்கள்) நலத் திட்டம் என்ற ஒரு திட்டத்தையும் உருவாக்கினேன். இத்திட்டத்தின்கீழ், கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில், 1995 ஆம் ஆண்டு மே மாதம் முதல் கட்டுமானத் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றார்கள். தற்போது 6,30,812 நபர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின்கீழ் கட்டுமானத் தொழிலாளர்கள் விபத்தில் உயிர் இழக்கும்போது, அவர்களது குடும்பங்களுக்கும், விபத்தில் நிரந்தர முடக்கமோ அல்லது உடல் உறுப்புகள் இழப்போ ஏற்படும்போது அத்தகைய தொழிலாளர்களுக்கும் காப்பீட்டுத் தொகை வழங்க வழிவகை செய்யப்பட்டது.

2005 மார்ச் 29] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1994 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான வழிமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2001 ஆம் ஆண்டு நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, கட்டுமானத் தொழிலாளர்கள் நலத் திட்டத்தின் அடிப்படையில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நான் முடிவு எடுத்தேன். 2001–2002 ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் நலத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில், கட்டுமானத் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் தொய்வின்றி, தொடர்ந்து செயல்படுத்தப்படுவதற்கு ஏதுவான வழிமுறைகளைக் கண்டறிய, ஓய்வூதிய நிபுணர் ஒருவர் (Actuary) நியமிக்கப்பட்டார். அதன் பின்னர் சிறப்புப் பணிப் பிரிவு, அதாவது, Task Force ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. அந்த சிறப்புப் பணிப் பிரிவு அறிக்கையின் அடிப்படையில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–10

இதன்படி, 60 வயது நிரம்பிய கட்டுமானத் தொழிலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் தொடர்ந்து ஐந்து வருடங்களாவது பதிவுபெற்ற உறுப்பினராக இருப்பாராயின், அவருக்கு மாதந்தோறும் 200 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

60 வயதுக்கு முன்னரேயே நிரந்தர உடல் முடக்கம் ஏற்பட்டாலோ, அல்லது உடல் நலக் குறைவால் பணி செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலோ, அவர்களும் மாதந்தோறும் 200 ரூபாய் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் ஆவர். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு வழங்கப்படும் ஓய்வூதியத்தை, மேற்சொன்ன தகுதிகளின் அடிப்படையில் 2000 ஆம் ஆண்டு முதலே, அவரவர் தகுதிபெற்ற தேதியிலிருந்தே வழங்கவும் நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்படி, நாளது தேதி வரை, 60 வயது நிரம்பிய 3,021 கட்டுமானத் தொழிலாளர்கள் ஓய்வூதியம் பெறுவார்கள். இதற்கு ஏற்படும் செலவு 1.46 கோடி ரூபாய் ஆகும். மேலும், அடுத்த ஆண்டு, அதாவது 2005–2006 ஆம் ஆண்டு ஓய்வூதியம் பெறத் தகுதி அடையும்

1,752 நபர்களுக்கான ஓய்வூதியத்தையும் சேர்த்து, 4,773 நபர்களுக்கு, வரும் நிதி ஆண்டுக்கு 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவாகும்.

கட்டுமானப் பணியில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள் உறுதியான தங்களது உடல் திறனின் அடிப்படையிலேயே அப்பணியை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் வயது முதிர்ந்த நிலையிலும், நிரந்தர உடல் முடக்கம் மற்றும் உடல் நலக் குறைவு ஏற்படும்போதும், எந்தப் பணியும் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு, ஒரு அவநம்பிக்கையுடன் வாழ வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர். அத்தகையோர் வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையைப் பெறும் வகையிலும், ஒட்டுமொத்த கட்டுமானத் தொழிலாளர் வர்க்கமும் வாழ்க்கையில் ஒரு பிடிப்பைப் பெறுகின்ற வகையிலும், அவர்களுக்கு ஒரு சமூகப் பாதுகாப்பை இந்தப் புதிய ஓய்வூதியத் திட்டம் வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. சில எதிர்க்கட்சிகள் அவைக்கு வராமல் புறக்கணிப்பு செய்திருப்பது – மாண்புமிகு முதலமைச்சர் கருத்து

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் சில கருத்துகளைத் தெரிவிப்பது அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இப்போது நான் வெளியிட்டது மிக முக்கியமான ஓர் அறிவிப்பாகும். இந்த நேரத்தில் எதிர்க்கட்சி வரிசைகள் காலியாக உள்ளன. இது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். இப்படி சட்டப் பேரவைக்கு வராமல் புறக்கணித்தால், அதனால் எதிர்க்கட்சிகளுக்குத்தான் நஷ்டமே தவிர, எங்களுக்கு, இந்த அரசுக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் உண்மையான நஷ்டம் யாருக்கு என்று சொன்னால், இந்த எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாக்களித்து, அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, அவர்களைத் தேர்ந்தெடுத்து இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்களே அவர்களது தொகுதியைச் சார்ந்த வாக்காளப் பெருமக்கள், அவர்களுக்குத்தான் உண்மையிலேயே இதனால் நஷ்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால் பேசிய சுயேச்சை உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள், ** என்று மாண்புமிகு பேரவைத் தலைவரைப் பார்த்துச் சொன்னார். எதிர்க்கட்சி உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வெளியேற்றவில்லை. நேற்று ஒரு நாள்தான், அவர்கள் இங்கே தொடர்ந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.